SOND

*இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.*

*T.P:- 077-3314262* *E-Mail:-senthu@eureka.lk* *web:-ww.sond,lk*

# மாதாந்த அறிக்கை

## மாசி, 2013.

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

இதழின் உள்ளே .........

1. அம்பாறை
2. மட்டக்களப்பு
3. யாழ் ஆகிய மூன்று மாவட்டங்களுடைய செயற்பாடுகள்

"We all will Create a Better World"

SOND

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம் கீழ்வருமாறு.

## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல்

அம்பாரை மாவட்ட முன் பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடலானது 2013.02.20 அன்று மாலை 02.30 மணிக்கு அக்கரைப்பற்று SOND அமைப்பின் இணைப்பாளர் த.விஜயகுமார் அவர்களின் தலைமையில் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் 14 முன்பள்ளியைச் சேர்ந்த 25 ஆசிரியர்கள் மற்றும் திருக்கோவில் கல்வி வலயத்தின் முன்கல்விப் பாடசாலைகளுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. தர்மபாலன் ஆகியோரும் கலந்து கொண்டனர்

கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானம்

எதிர் வரும் மாதாந்த கலந்துரையாடலின் போது காந்தி பாலர் பாடசாலை ஆசிரியர்களினால் கற்றல் செயற்பாடுகள் எனைய ஆசிரியர்களுக்கு செயல்முறை பயிற்சியின் ஊடாக செய்து காண்பிக்கப்படும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.





எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்.(Create a conducive Society for Good Environment for the Future).

**மரக்கன்றுகள் வழங்குதல்.**

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக அக்கரைப்பற்று வன வள திணைக்களத்தினூடாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் அக்கரைப்பற்று SOND அமைப்பிற்கு வழங்கப்பட்ட 132 மரக்கன்றுகளில் 21 மரக்கன்றுகள் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் ஒலுவில் கிராமத்தில் உள்ள இளைஞர் கழகத்தினுடாக 25/02/2013 அன்று வழங்கப்பட்டு அவை பொது இடங்களில் நடப்பட்டுப் பராமரிக்கப்பட்டுவருகின்றது.

**சூழல் விழிப்புணர்வு செயற்திட்ட பாடசாலை தெரிவுசெய்தல்.**

"சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றிற்கான பிரசாரங்களை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குதல்" எனும் உப செயற்பாட்டின் அலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் செயற்பட்டுவரும் சென் ஜோன்ஸ் பாடசாலை தெரிவுசெய்யப்பட்டிருப்பதுடன் அங்கு பாடசாலைச் சுற்றாடல் பாதுகாப்புக் குழு அமைத்தலுக்அகுரிய படிவங்களும் அதிபரிற்கு 26/02/2013 அன்று வழங்கப்பட்டுள்ளது.





"We all will Create a Better World"

# நிதியின்றிய செயற்திட்டங்கள்

அரச சார்பற்ற நிறுவனமென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

## சிறுவர் செயற்றிட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மூவினத்தினையும் சேர்ந்த 18 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 40 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள். கலந்துரையாடல்கள்.

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் 4 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளது. இதில் 72 சிறுவர்கள் கலந்து கொண்டு 3 அறிவூட்டும் திரைப்படக்காட்சிகளும் காண்பிக்கப்பட்டுள்ளது. இம் மாதம் காந்தி கழகத்தில் புதிதாக 10 சிறுவர் இணைந்துள்ளார்.

கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் கீழ்வருமாறு.

1. சிவராத்திரியினை முன்னிட்டு அக்கரைப்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் கலை நிகழ்ச்சி நடாத்துவது தொடர்பாகவும் இந் நிகழ்வில் அனைத்து கழக உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என கூறப்பட்டது.
2. எதிர் வரும் மாதம் ஒவ்வொரு சிறுவர்களும் 05 புத்தகங்களை எடுத்துச் சென்று உங்கள் வீட்டின் அருகில் உள்ள நபர்களுக்கு கொடுத்து அவர்களின் வாசிப்புப்பழக்கத்தினை அதிகரிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டது.
3. இனி வரும் காலங்களில் காந்தி கழக உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக ஒவ்வொரு சிறுவர்களும் கலந்துரையாடலுக்கு வருகை தரும் போது ஒவ்வொரு சிறுவர்களை அழைத்து கொண்டு வருகை தர வேண்டும் என கூறப்பட்டது.





SOND

# சிறுவர் செயற்றிட்டம்

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

இம் மாதம் 2013.02.03,10 ம் திகதிகளன்று காந்தி கழக சிறுவர்களுக்கு சிங்கள வகுப்பு கழக தலைவரான செல்வி டிலானி தலைமையில் நடைபெற்றது. இவ் இரண்டு சிங்கள வகுப்பிலும் 18 சிறுவர்கள் கலந்துகொண்டுள்ளார்கள்.

### SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

காந்தி கழக சிறுவர்களுக்கு இரண்டு ஆங்கில வகுப்புக்கள் பணியாளரான விஜயகுமார் அவர்களினால் நடாத்தப்பட்டது. இதில் 21 மாணவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்.

# கணனிப் பயன்பாடு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனி அறிவினை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அலுவலகத்தில் இலவச கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் 14 சிறுவர்களினால் 31தடவைகள் கணனிப்பாவனை பயன்படுத்தப்பட்டுள்ளது.





# தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 9 தலைப்பில் 99 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.



"We all will Create a Better World"

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம் கீழ்வருமாறு.

## எதிர்காலத்தல் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் (Create a conducive Society for Good Environment for the Future).

***பெண்கள் மற்றும் விவசாய குழுக்களின் முகாமைத்துவ கொள்ளளவினை கட்டியெழுப்புதல் Management Capacity building for farmers & women groups***

ஆரையம்பதி-கிழக்கு செல்வாநகர் தாய்மார் சங்கத்தின் பொதுக் கலந்துரையாடல் 10.02.2013ம் திகதி 10.00am நடைபெற்றுள்ளது அதில் கிராம உத்தியோகத்தர் உட்பட அங்கத்தவர்கள் 19 பேர் கலந்துகொண்டனர்.

### மாதிரி பண்ணை அமைத்தல் தொடர்பாக

மண்டபத்தடி கமநல கேந்திர நிலையத்தின் கீழ் இயங்கிவரும் 25 விவசாய அமைப்புகளில் வாதக்கல்மடு கமநல அமைப்பினை மாதிரி விவசாயப்பண்ணை செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. அந்தவகையில் திரு குணரெட்ணம் அவர்களது தோட்டம் பார்வையிடப்பட்டது.

## காணிதொடர்பிலான ஆவணங்களை ஆவணப்படுத்தல் ஊடாக முரண்பாட்டினை குறைத்தல் (Conflict mitigation through land documentation)

"காணி ஆவணப்படுத்தல் ஊடாக முரண்பாட்டினை தணித்தல்" கருப்பொருளின் மட்டக்களப்பு மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவுடன் SOND நிறுவனம் இணைந்து USAID நிறுவனத்தின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள கிராம சேவை உத்தியோகஸ்தர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கும். காணி உத்தியோகஸ்தர்களுக்குமான காணி ஒழுங்குபடுத்தல் தொடர்பான பயிற்சி நெறியினை நாடாத்தி வருகின்றது. இது கீழ்வரும் பிரதேச செயலகங்களில் செயலமர்வுகள் இடம்பெற்றது.

2013.03.05,06 ம் திகதிகளில் வாழைச்சேனை மத்தி, செங்கலடி ஆகிய இரு பிரதேச செயலக கிராம சேவகர்களுக்கும் கலந்துரையாடல் நடைபெற்றது. மேலும் LRC தொடர்பாக சம்பவ கற்கையும் தயாரிக்கப்பட்டது.

இச் செயற்றிட்டத்தின் பொருட்டு மாவட்ட காணி சீர் திருத்த ஆணைக்குழுவிற்கு வேலையினை துரிதப்படுத்தவும், நவினப்படுத்தவும் பல்வேறு இலத்திரனியல் தளபாட பொருட்களும் வழங்கப்பட்டது.





"We all will Create a Better World"

SOND

## வளநிலைய பயன்பாடு

சொண்ட அமைப்பானது மக்களின் வாசிப்பு திறன் மற்றும் அனைவருக்கும் கணனி அறிவு ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இலவச நூலக சேவை மற்றும் இலவச கணனி சேவைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. வள நிலையம் மூலமாக மாசி மாதம் 10 சிறுவர்கள் ,14 இளையோர்கள் உட்பட 24 பேர் கணனியை பயன்படுத்தியுள்ளார்கள். மேலும் 2 பேர் கணனி வகுப்புக்கு புதிதாக இணைந்து கொண்டுள்ளார்கள்.

## வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு திட்டம்.

எமது சொண்ட் நிறுவனம் கிறிஸ்ரியன்எயிட் (**Christen Aid** ) நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அம்பிளாந்துறை கிராமத்தின் அம்பிளாந்துறை வடக்கு,அம்பிளாந்துறை மேற்கு மற்றும் அம்பிளாந்துறை மத்தி ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் இயற்கை வீட்டுத்தோட்ட முறைமையினை மக்களிடையே அறிமுகப்படுத்துவதன் மூலம் உணவு பாதுகாப்பு நடவடிக்கையில் மக்களை ஈடுபடுத்தும் வகையில் 300 பயனாளிகளை கிராமத்திற்கு 100 பேர் என்ற அடிப்படையில் தெரிவுசெய்து வீட்டுத்தோட்டம் தொடர்பான திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

# யாழ் மாவட்டத்தின் செயற்பாட்டு விபரம் கீழ்வருமாறு.

## மதிவெடி அபாயக் கல்வி

எமது அமைப்பின் பணியாளர்களினால் சண்டிலிப்பாய் , தெல்லிப்பளை பிரதேசத்தில் மிதி வெடி அடையாளப்படுத்தப்பட்டு இராணுவத்தினரால் 22.02.2013 அகற்றப்பட்டது.

சண்டிலிப்பாய் , தெல்லிப்பளை பிரதேசத்தில் மிதிவெடி விழிப்புணர்வு தொடர்பான சுவரொட்டிகள் எமது அமைப்பின் பணியாளர்களால் ஒட்டப்பட்டது.

தெல்லிப்பளை, சண்டிலிப்பாய்,காரைநகர் பிரதேசத்தில் 08.02.2013- 27.02.2013ல் பாடசாலை மட்டத்திலும் வளலாய் இடைக்காடு J/284 எழுதுமட்டுவாள் J/333 கிராமமட்டத்திலுமான மிதிவெடி அபாயக்கல்வி செயற்திட்டம் எமது அமைப்பின் பணியாளர்களினால் வழங்கப்பட்டது.

தெல்லிப்பளை நகுலேஸ்வரம் J/226 கிராமத்தின் வரைபடத்தினை அப் பிரதேசத்தின் மக்களின் உதவியுடன் எமது அமைப்பின் பணியாளர்களினால் தயாரிக்கப்பட்டுள்ளது.











SOND

# அரசசாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்தி செயற்திட்டம்

02.02.2013 திகதி சங்கானை பிரதேச செயலர் பிரிவில் J/168 தொல்புரம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள முன்கொடை கிராமத்திலும், J/170 பொன்னாலை கிராம சேவையாளர் பிரிவிலும் J/175 பண்ணாகம் கிராமசேவையாளர் பிரிவிலும் உள்ள பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட 11பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாக 11ஆடுகள் வழங்கப்பட்டன.

யாழ்பாணம் , நல்லூர் , சண்டிலிப்பாய் , சங்கானை, கோப்பாய், ஆகிய 5 பிரதேச செயலர் பிரிவிகளிலுள்ள 20 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு மக்கள் பங்கேற்பு ரீதியாக தயாரித்த பிரதேச அபிவிருத்தி திட்டம் சமர்ப்பித்தலும் அமுலாக்கம் பற்றி அனுபவப்பகிர்வு அமர்வு 19.02.2013 செவ்வாய்கிழமை இலக்கம் 1229 காங்கேசன்துறை வீதியிலுள்ள செல்வ மஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்அமர்வில் செல்வி .S. நிஜானந்தி கிறிரியன் எயிட் நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தரும், NSA திட்ட ஒருங்கிணைப்பாளர், 20சிவில் சமூக அமைப்பின் அங்கத்தவர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், பிரதேசசபை உறுப்பினர்கள், சர்வதேச, உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் மக்கள் மன்ற, பொது ஒருங்கிணைப்புக் குழு ,SOND நிறுவன EU NSA உத்தியோகத்தர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் பங்குபற்றினர்.









# ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்தித்திட்டம்

இம் மாதம் கோப்பாய் பிரதேச செயலக பிரிவின் கீழ் செயற்படுத்தப்படும் IED திட்டத்தின் கீழ் செயற்பட்டுக் கொண்டு இருக்கும் வீட்டுத்தோட்ட வெயற்திட்டத்தைப் பார்வையிட விஷேட கள விஜயம் திரு கமலநாதன் அவர்களின் தலைமையில் மேற் கொள்ளப்பட்டது. 2013.02.6,7,22,23 திகதிகளில் தோட்டங்கள் பார்வையிடப்பட்டது.

## வீட்டுத்தோட்ட வருமானம் தரும் திட்டம்

வீட்டுத் தோட்ட திட்டத்தின் சிறந்த பயனாளிகளில் மூலிகைச் செய்கைக்காக 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட 50 மூலிகைச் செய்கையாளர்களுடனான கலந்துரையாடல் 24.02.2013ம் திகதி பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டது. இக் கலந்துரையாடலானது மூன்று பயனாளிகளின் வீட்டுத் தோட்டத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. மூலிகைகளின் பயன்பாடு பற்றியும் வழங்கப்படவுள்ள மூலிகைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

**27.02.2013**ம் திகதி மூலிகைச் செய்கையாளர்களாக தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்குமான மஞ்சள் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டது. நாற்றுமேடையிடும் முறை தோட்டத்தில் செயல்முறை மூலமாக காட்டப்பட்டதுடன் தற்போது பயனாளிகள் மஞ்சளினை நாற்றுமேடை இட்டுள்ளார்கள்.









SOND



## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.

“We all will Create a Better World”